# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.250/23 நாள்.25.03.2026

### DW1- திருமதி நம்பிக்கைமேரி, க/பெ. திரு.பிச்சை

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கு போட்ட வாதி எனக்கு அண்ணனா என்றால் ஆமாம். என் உடன் பிறந்தவர் வேறு யார் உள்ளார் என்றால் தங்கை உள்ளார். வழக்கு விபரம் தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு போட்டுள்ளேன் என்றால் வீடு வேண்டும் என்று போட்டுள்ளேன். வழக்கு தாக்கல் செய்ய நான் விபரம் சொன்னேன் என்றால் ஆமாம். எனக்கு எந்த வருடம் திருமணம் என்றால் தெரியவில்லை. என் முதல் கணவர் பெயர் செல்வநாயகம் என்றால் ஆமாம். அவர் இறந்தபிறகு யாரை திருமணம் செய்தேன் என்றால் பிச்சை. முதல்கணவர் இறந்து ஆறு வருடம் கழித்து 2வது திருமணம் என்றால் ஆமாம். என் திருமணத்திற்கு முன்பே அப்பா, அம்மா இறந்துவிட்டார் என்றால் ஆமாம். என் அண்ணன் சவரிமுத்து திருமணம் செய்துவைத்தார் என்றால் ஆமாம். நான் திருமணத்திற்கு முன்பு வீட்டிலிருந்த ஆறுவருடத்தில் வாதி என்னை பார்த்துகொண்டார் என்றால் ஆமாம். வாதியின் மனைவிக்கு போட்ட நகையை எனக்கு போட்டுதான் 2வது திருமணம் நடந்தது என்றால் இல்லை. மேற்கண்டவாறுதான் எனக்கு திருமணம் நடந்தது என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு போட்டுள்ள இடத்திற்கு அரசாங்கம் எனக்கு கொடுத்தபோது 200ரூபாய் கட்ட சொன்னார்கள் என்றால் இல்லை. செலவுக்கான தொகையை என் கணவர் வாங்கிவந்து செலவு செய்துவிட்டார் என்றும், வாதிதான் அந்த தொகையை மீண்டும் எனக்கு கொடுத்தார் என்றும் சொன்னால் இல்லை. என் கணவர் பிச்சைக்கு குடிபழக்கம் உள்ளவர் என்றால் இல்லை. அவர் எப்போது இறந்தார் என்றால் நான் படிக்காததால் வருடம் தெரியவில்லை. வழக்கு போட்டுள்ள இடம் அரசால் எனக்கு எப்போது கொடுக்கபட்டது என்றால் தெரியாது. வாதி அந்த இடத்தில் எனக்கு கூரை வீடு கட்டிகொடுத்தார் என்றால் இல்லை கூலி வேலை பார்த்து நான் கட்டினேன். வழக்கில் அந்த விபரம் சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. கூரைவீட்டை என் அண்ணன்தான் கட்டிகொடுத்தார் என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் இல்லை. எனக்கு வேறு வருமானம் இல்லை என்றால் அரசு உதவி பணம் வரும். அரசு உதவி பணம் தவிரவேறு வழியில்லை என்றால் ஆமாம். எத்தனை வருடமாக நான் வாங்குகிறேன் என்றால் 20 வருடம். ஆரோக்கியமேரி என் தங்கை என்றால் இல்லை ஆல்போன்ஸ்மேரி. ஆரோக்கியமேரி என்

அப்பாவின் மூத்ததார குழந்தை என்றால் இல்லை. என் கணவர் பிச்சை இறந்தபிறகு பூதராயன்நல்லூரில் என்னால் குடியிருக்க முடியாத சூழ்நிலை ஆரோக்கியமேரி மூலம் ஏற்பட்டது என்றால் இல்லை. எனது தங்கை மகன் விக்டர் பிரச்சனைக்கு பிறகு என்னை அழைத்துபோய் அவர்கள் வீட்டில் வைத்துகொண்டார் என்றால் ஆமாம். விக்டர் வீட்டில் நான் இருந்தபோது எனக்கும் அவர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு விக்டர் அடித்து எனது வலது கை முறிந்துவிட்டது என்றால் இல்லை. என் சித்தப்பா சின்னதுரை அந்த விஷயம் கேள்விபட்டு என்னை அழைத்து வந்து வாதி வீட்டில் விட்டார் என்றால் இல்லை. வாதி வீட்டில் விட்டபோது அங்குபோய் நான் போய் சண்டை போட்டேன் என்று என்னிடம் வாதி கேட்டார் என்றால் இல்லை. விக்டர் எனக்கு தெரியாமல் வீட்டின் பின்புறம் இருந்த தேக்கு மரத்தை வெட்டிபோய்விட்டார் என்றால் இல்லை நான்தான் வெட்டசொன்னேன். சொந்தகாரர்கள் என்னிடம் பிரச்சனை செய்ததால் வாதி என்னோடு வந்து அங்கிருந்த கூரை வீட்டில் இருந்தார் என்றால் இல்லை. நான்தான் வாதிக்கு தாவா சொத்தை வைத்துகொள்ள சொல்லியும் கிரையம் எழுதிகொடுத்தும் உள்ளேன் என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது என்னுடைய ரேகை என்றால் என்னுடைய படிக்க தெரியாது. தாவா சொத்து தொடர்பாக வாதிக்கு நான் எழுதிகொடுத்தேன் என்றால் இல்லை வங்கியில் பணம் வாங்கவேண்டும் நீ வந்து கையெழுத்துபோடு என்று சொன்னதால் போட்டுகொடுத்தேன். வா.சா.ஆ.1இல் உள்ள ரேகைகள் கடன் வாங்கி தருவதற்காக நான் வைத்ததா என்றால் தெரியவில்லை. ரூ.97200/- வாதியிடம் நான் வாங்கிகொண்டு வா.சா.ஆ.1 எழுதிகொடுத்தேன் என்றால் இல்லை. தாவா சொத்திலுள்ள கூரை வீட்டிற்கு என் பெயரில் மின்னிணைப்பு அப்போதே பெற்றேன் என்றால் என் பெயரில் இப்போது வரை உள்ளது. என் தங்கை என்தாலும், எனக்கு வேறு ஆதரவு இல்லை என்பதாலும் வாதி என்னை தொடர்ந்து அந்த சொத்தில் குடியிருக்க அனுமதித்தார் என்றால் சரியல்ல. வாதி என்ன வேலை பார்த்தார் என்றால் துப்பாக்கி தொழிற்சாலையில் வேலை பார்த்தார். என் முதல் திருமணம் முதல் அவர் அங்கு வேலை பார்க்கிறாரா என்றால் அப்பா இறந்தபிறகு வேலை பார்த்தார். தாவா சொத்தை ரூ.5000பணம் வாங்கி கொண்டு அடமானம் வைத்தார் என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கபடுவது அரசாங்கம் எனக்கு கொடுத்த வீட்டுமனை பட்டா என்றால் ஆமாம். அது **வா.சா.ஆ.4** ஆகும். மேற்படி ஆவணத்தை நான் ஆவணம் எழுதிகொடுத்தபோது அவரிடம் கொடுத்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள வீடு எந்த வருடம் கட்டினேன் என்றால் வருடம் தெரியவில்லை. வாதிதான் தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால் இல்லை அரசாங்கத்தில் பொருட்கள், கம்பி, பணம் கொடுத்தார்கள். மேற்கொண்டு பணம்

செலவு செய்து வாதி கட்டினார் என்றால் எனக்கு ஒன்றும் அப்படி தெரியவில்லை. வாதிதான் தாவா சொத்தில் வீடு கட்டிகொடுத்தார் என்றும் நான் பொய்யாக மேற்கண்டவாறு சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மூலம் வாதி அவருடைய மனைவி நகையை அடமானம் வைத்துதான் தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால் சரியல்ல. வாதி அவருக்கு வேண்டிய ஆட்கள் தாவா சொத்தில் வீடு கட்டினார் என்றால் சரியல்ல கொத்தனார் வேலை செய்தார் மற்ற வேலையை நான்தான் செய்தேன். அரசாங்கத்தில் வீடு கட்ட பணம் கொடுத்ததாக சொல்கிறேனே அதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கபடும் இரண்டு புகைபடங்களும் நான் கட்டியுள்ள வீட்டை காண்பிக்ககூடியவை என்றால் ஆமாம் அது **வா.சா.ஆ.5** ஆகும். அரசாங்கத்தால் கட்டியவீடு என்பதை காண்பிக்க மேற்படி புகைபடத்தில் படம் உள்ளதா என்றால் மோடிவீடு. வீட்டில் எத்தனை ரூம்கள் உள்ளது என்றால் ஒருகால், ஒரு ரூம், அந்த பக்கம் சந்து, இந்த பக்கம் சந்து. வா.சாஆ.5 புகைபடத்தில் உள்ள வீடு அரசாங்கத்தால் கட்டி கொடுக்கமாட்டார் என்றும் வாதியால் கட்டியது என்றும் சொன்னால் சரியல்ல. வீட்டுவரி, தண்ணீர்வரி, மின்னிணைப்பு ரசீது யார் பெயரிலுள்ளது என்றால் என் பெயரில் உள்ளது. நீதிமன்றத்தில் அந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது பொய் என்றும், மேற்படி ரசீதுகள் வாதி பெயருக்கு உள்ளது என்றால் சரியல்ல.தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு இன்றைய தேதிவரை வாதிதான் வரி கட்டுகிறார் என்றால் சரியல்ல. நான் அந்த வீட்டிற்கு எந்த வரியும் கட்டாததால் அந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு போட்ட இடத்திற்கு வேறு யாருக்கும் ஆவணம் எழுதிகொடுக்கவில்லை என்றால் என் தங்கை மகனுக்கு உயில் எழுதி கொடுத்துள்ளேன். உயிலின் அசல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் என் தங்கை மகனுக்கு உயில் எழுதிவைக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய பாதுகாப்பிற்காக வாதி எனக்கு வீடு கட்டி கொடுத்து என்னோடு வசித்து வந்தார் என்றால் இல்லை நான் ஒஏபி பென்சன் வாங்கி சாப்பிட்டு வந்தேன். நான் என் தங்கை மகனின் துண்டுதலின்பேரில் வாதியை தாவா சொத்திலிருந்து வெளியேற்றிவிட்டு அவர் என்னை தொந்தரவு செய்யகூடாது என்று வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் முறையாக மதிப்பீட்டு நீதிமன்ற கட்டணம் செலுத்தாமல் வாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரம் செல்லாது என்று கோரியுள்ள பரிகாரம் ஏற்ககூடியதல்ல என்றால் சரியல்ல. ஆவணத்தை ரத்து செய்யதான் நான் கோரமுடியுமே தவிர செல்லாது என்று கோரமுடியாது என்றால் சரியல்ல. சாட்சி அன்புசெல்வி எங்கள்வீட்டிற்கு பக்கத்தில் குடியிருந்தார் என்றால் குடியிருந்தாலும் எனக்கு தெரியாது.

கிரைய் பத்திரம் எழுதி கொடுக்க நான்தான் அவரை சாட்சி அழைத்துபோனேன் என்றும் வழக்கிற்காக தெரியாது என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. நானாக விருப்பபட்டுதான் தாவா சொத்தை வாதிக்கு எழுதிவைத்துவிட்டு தவறான காரணங்களுடன் தற்போது வழக்க தாக்கல் செய்துள்ளதால் அது நிலைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைககககூடியது என்றால் சரியல்ல.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.03.25 16:20:54 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**